నల్వులు నల్వుకున్నారు. ఈ నాడుకోస్తా జిల్లాలలో నివసించే ఏ వ్యక్తి రాయలసీమకు కృష్ణానీరు ఉపయోగపడరాదని అనడు. కరువు కాటకాలకు నిలయమైన రాయలసీమ తప్పక కృష్ణా జిల్లాలవల్ల సస్యశ్యామలం కావలసిందే. రాయలసీమలో కరువు పరిస్థితులు విర్పడినప్పుడు సాయశక్తులా సహాయపడిందిసర్కారు ఆంధ్రే లేనిదీ, తమిళులు మాత్రంకాదని సుబ్బారాయుడు గారికి తెలియజేస్తున్నాను. సర్కార్ రాయలసీమ అని విడదీసి ఆంధ్రులలో విభేదాలు కల్పించటానికి మాత్రమే అర్థికమంత్రి వంటివారు ప్రయత్నంచేస్తారు కాని రాయలసీమకు వారు ఎంతమాత్రంసహాయం చేయరు. తుంగభద్రా, సిద్ధేశ్వరం ప్రాజెక్టులకు సర్కార్ ఆంధ్రులు ఎంతమాత్రం వ్యతిరేకులుకారు. వ్యతిరేకంగా వర్తించినది యీ ప్రభుత్వం వారేనని గుర్తుంచుకోవాలి. సర్కార్ రాయలసీమ ప్రజల సుఖ్య కలతలు పుట్టించి కృష్ణనీటిని దక్షిణాన వున్న తమిళ జిల్లాలకు తీసుకొనిపోవటానికే యీ ప్రభుత్వం ప్రయత్నిస్తోంది. గండికోటకుకాని, సిద్ధేశ్వరానికికాని తుంగభద్రా ప్రాజెక్టుకు కాని మేము ఎంతమాత్రం వ్యతిరేకులం కాము. రాయలసీమ తుంగభద్ర, కృష్ణా, పెన్నానదుల నీటివల్ల సస్యశ్యామలంకావాలని కోరుకునేవారిలో మేము ప్రథములం అని మనవిచేస్తున్నాను. ఈ ప్రాజెక్టులు అమలు జరుపుటకు అడ్డు తగులుతున్నది రాజగోపాలాచారి, సుబ్రహ్మణ్యం వంటి వారేనని మనవిచేస్తున్నాను. సర్కార్ రాయలసీమ విభేదాలను తిరగతోడి ఆంధ్ర రాష్ట్ర నిర్మాణానికి అడ్డురావడానికి యీ ప్రభుత్వం చేస్తున్న ప్రయత్నాలకు లోనుకాపోవద్దని ఆంధ్రశాసన సభ్యులకు విజ్ఞప్తిచేస్తున్నాను. రాయలసీమ పట్ల అభిమానం చూపడమేవారి ఉద్దేశ్యమైనట్లయితే రాయలసీమలోని విద్యుచ్ఛక్తి ప్రణాళికలను ఎందువల్ల యీ ప్రభుత్వం విరమించిందని ప్రశ్నిస్తున్నాను. ఆంధ్రరాష్ట్రం ఎన్నటికీ లోటు రాష్ట్రం కాదు. రాయలసీమ అభివృద్ధి వెనుదాంటే ఆంధ్ర రాష్ట్రం విర్పడే తీరాలి అనిచెపుతూ ఇంతటితో విరమిస్తున్నాను."

* SRI S. KANDASWAMY GOUNDER :—" కనం ఉదవి సభానాయకర్ అవర్కళే, ఇన్ద బడ్జెట్టిల్ పంచ నివారణత్తిర్కాక ఎవ్వళవు పణం ఒతుక్కప్పట్టదు ఎన్బతైప్ పార్కక వేణ్డుం. కడన్ద వరుడత్తైవిడ ఒవ్వొన్ఱిలుం కమియాక ఒతుక్కప్పడువతినాల్ ఇన్దప్ పంచత్తై ఎప్పడి తీర్ప్పదు ఎన్ఱు విళంగవిల్లై. ఇదై ఏన్ కమియాక ఒతుక్కియిరుక్కిఱార్కళ్ ఎన్ఱాల్ కవర్ణమెణ్డుక్కు పణం ఇల్లామల్ ఇరుక్కలాం. ఇదై అనుసరిత్తుత్తాన్ ఇవ్వళవు కమియాక ఒతుక్కియిరుక్కిఱార్కళ్ ఎన్ఱు నినైక్కిఱేన్. మాకాణ సర్కారిడం పణం ఇల్లైయెన్ఱాల్ మత్తిన సర్కారిడం పణత్తై వాంగియావదు మక్కళుడైయ కష్టత్తైత్ తీర్క వేణ్డుమెన్ఱు కేట్టుకొళ్ళుగిఱేన్. పల వరుషంగళాక ఏరి కుళంగళ్ ఎల్లామ్ పళుదు పార్క్కామలిరుంద్తువిట్టార్కళ్. వేలైయిల్లాత్ తిణ్డాట్టత్తైక్ కుఱైక్క ఇదు పోన్ఱ పంచ నివారణ వేలైకళై ఎటుత్తుక్కొణ్డు ఏళై జనంగళుక్కు వేలై కొటుక్కలాం. ఎన్ పిరాన్తియత్తిల్ మిట్టాక్కళ్ ఇరుక్కిన్ఱన. 50, 60 మిట్టాక్కళ్ ఇరుక్కిన్ఱన. ఎనక్కు వయతు 49 ఆకిఱదు. ఎన్ వయతిలేయే ఇన్ద మిట్టా ఏరికళై రిప్పేర్ సెయ్తతాక తెరియవిల్లై ఎన్ఱు సొల్లిక్కొళ్ళవే ఆశైప్పడుకిఱేన్. ఇవ్వళవు కాలం రిప్పేర్ ఇల్లామల్ ఉడైన్దిరుక్కుమ్ ఏరికళుక్కు ఒరు నడవడిక్కైయుమ్ ఎటుక్కామల్పోనాల్ ఏదావదు మళై వన్దాల్ ఇవైకళ్ తాంగుమా ?

" ఇన్దక్ కాలత్తిలే యారుక్కు నిలం అధికమాక ఇరుక్కిఱదెన్ఱు పార్త్తాల్ అన్ద మిట్టాదార్ అవర్కళుక్కుత్తాన్ అధికమాక ఇరుక్కిఱదు. నల్ల పణ వసతియుళ్ళ అన్ద మిట్టాదార్కళ్ ఏన్ సెలవు పణ్ణువదర్కు మట్టుమ్ పణమ్ ఇల్లైయెన్ఱు సొల్లువిఱార్కళ్ ? కుత్తకైక్కు మిట్టాదార్కళ్ ఎవ్విదమ్ విడుకిఱార్కళ్ ఎన్ఱాల్ ఎట్టు అల్లదు పత్తు కణ్డకత్తిర్కు విడుకిఱార్కళ్. అదర్కు వరుమానమ్ అప్పొళుదు 100 రూపాయ్తాన్ వరుమ్. ఇప్పొళుదు 5 కణ్డకమ్ పోట్టాలుమ్ సరి 250 రూపాయ్కళ్ వరుమ్. 11 40 a.m.

[Sri S. Kandaswamy Gounder] [18th March 1953

அதோடு அவாகள் திருப்தி அடைகிறார்கள். கம்மியாகப் போடுகிறார்கள். அதிகமாக வருமானம் பெருகிறார்கள் இருந்தும் பல வகையிலும் சுரண்டாமல் விடாமலிருக்கமாட்டார்கள். ஆகையால் கவர்ண்மெண்டு இப்பொழுது இந்த மிட்டாக்களை எடுத்துக்கொண்டது உசிதமானது என்று தெரிவித்து கொள்ளுகிறேன். சர்க்கார் 3 வருஷமாக கந்தாயம் வசூல் பண்ணுகிறார்கள். எங்கள் இடம் இப்பொழுது தாயில்லாக் குழந்தை மாதிரி தவித்துக் கொண்டிருக்கிறது. இனியாவது சர்க்கார் ஏதாவது பொது மராமத்து செய்யாமல் இருப்பார்களேயானால் இதனால் பலவித கஷ்டங்கள் ஏற்படும். விவசாயிகளும் பல விதத்தில் பாதிக்கப்படுவார்கள் என்று சர்க்காருக்குத் தெரிவிக்கிறேன்.

" இரண்டாவதாக 2 ஆயிரம் ரூபாய்க்கு மேலே கலெக்டர் செலவு செய்கிறதற்கு அதிகாரம் இல்லையென்று சொல்லுகிறார்கள். இப்படி ஐம்பது, அறுபது வருஷங்களாக லட்சியம் செய்யப்படாது மராமத்து செய்யப்படாமலிருக்கும் மிட்டா ஏரிகளையெல்லாம் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் இரண்டாயிரம் ரூபாய்கள் போதவே போதாது. ஆகவே இதற்காக குறைந்தது 10 ஆயிரம் அல்லது 5 ஆயிரமாவது சாங்ஷன் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்குத் தக்க உத்திரவை கவர்ண்மெண்டு ஜில்லா கலெக்டருக்கு அனுப்பி வைக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" பாலக்கோடு வட்டாரத்தில் ஒரு கால்வாய் எடுக்க வேண்டுமென்று முன்பு ஒரு சமயம் நான் இதே சட்டசபையில் பேசியிருக்கிறேன். தர்மபுரம் ஏரிக்கு ஒரு அளவு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஊருக்குக் கால்வாய் எடுத்தாலும் அந்த நீர் கடைசியில் தருமபுரி ஏரிக்குத்தான் போகிறது. ஆகையால் தருமபுரி ஏரிக்குத் தண்ணீர் எடுத்துச் செல்ல கால்வாய் வெட்டும்பொழுது, நான் முன்பு சொன்னது போல பாப்பாரப்பட்டி பக்கமாக அதைத் கொண்டு செல்லவேண்டும்.

" மேலும் எங்களுக்குச் சில தொந்தரவுகள் இருக்கின்றன. மிட்டா தொந்தரவுகள் ஒரு பக்கம் இருக்கிறதோடு சில அதிகாரிகளின் தொந்தாவுகளும் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன. இந்த அத்காரிகளின் தொந்தரவை இந்த சபையில் நான் எடுத்துச் சொன்னாலும் ஆபத்தாக இருக்கிறது. சொல்லாமல் இருந்தாலும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி நான் கனம் முதல் மந்திரி அவர்களோடு தனிமையில் பேச விரும்புகிறேன். முன்பு ஒரு தடவை போலீஸ் அதிகாரிகளினால் ஏற்பட்ட தொந்தரவை இந்தச் சபையில் பேசியதற்காகப் பின்னர் எங்கள் கிராமம் ரொம்பவும் துன்பத்தை அனுபவித்தது. அவர்கள் எழைகளை ரொம்பவும் சுரண்டுகிறார்கள். அதைப்போலவே கிராம அதிகாரிகள் ஹரிஜனங்களிடம் நிலத்தைப் பயிரிடச் சொல்லுகிறார்கள். பயிர் நன்றாக விளைந்தால் பங்கு கேட்கிறார்கள். பங்கு தரமறுத்தால் அரசாங்கத்துக்கு எழுதிவிட்டு விவசாயிகளுக்கு 6-ம் நம்பர் நோட்டீஸ் விட்டு விடுகிறார்கள். அதாவது நல்ல கதிரோடு இருக்கிற வயலை அறுத்து எறிந்து விடுகிறார்கள். இந்த மாதிரியெல்லாம் எங்களுக்கு அதிகாரிகள் தொந்தரவு கொடுத்தால் நாங்கள் என்னதான் செய்கிறது என்று தெரியவில்லை. அனேகமாக எங்கள் பிராந்தியம் மிட்டா பிராந்தியத்தைச் சேர்ந்ததினால், அந்த மிட்டா பிராந்தியம் இன்றையதினம் அரசாங்கத்தின் கைக்கு வந்துவிட்டதினால் அப்பொழுது இருந்த கஷ்டங்கள் எல்லாம் எங்களுக்கு திரும்ப வராதிருக்க சர்க்கார் உடனடியாக தக்க ஏற்பாட்டைச் செய்தாகவேண்டும்.

" கனம் ராஜாஜி அவர்கள் இந்த மந்திரி சபைக்குத் தலைவராக வந்திருக்கிறார். அவர் ஒரு பணக்காரக் கட்சிக்குத் தலைவர். ஆகவே அவர் கட்சியில் இருப்பவர்களிடமிருந்தாவது பணம் வாங்கி அவைகளை சொஸைடிகள் மூலம் கடன் கொடுத்து விவசாய மக்களின் நன்மையை உத்தேசித்து காரியங்களைச் செய்யவேண்டும்.

" இன்றையதினம் பணக்காரர்கள் மனமுவந்து தங்கள் பணத்தை நாட்டின் நலனை உத்தேசித்து செலவிட முன் வந்தால் தான் இந்த நாட்டுக்கு க்ஷேமம் உண்டாகும். அவர்கள் செலவிடவேண்டுமானால் அது ஸ்ரீ ராஜாஜி அவர்களால்தான் முடியும். ஏனென்றால் இன்றையதினம் பெரிய பணக்

18th March 1953] [Sri S. Kandaswamy Gounder]

காரர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியில்தான் இருக்கிறார்கள். அது தான் பெரிய பெரிய பணக்காரர்களின் கட்சி. பெரிய பெரிய நிலச்சுவாந்தார்களின் கட்சி. ஜமீன்தார்களின் கட்சி. மிட்டாக்களின் கட்சி. அந்தக் கட்சியின் தலைவர்தான் ஸ்ரீ ராஜாஜி. எப்படி மகாபாரதக் கதையில் கொடையாளி கர்ணன், மகா கொடியவனான துர்யோதனனுடைய பொக்கிஷத்திற்கு அதிகாரியாக இருந்து அவன் பணத்தை எடுத்து இவன் தானம் செய்து வந்தானோ அதைப் போலவே, கர்ணனைப்போல் நல்ல குணம் படைத்த கனம் ராஜாஜி அவர்கள் காங்கிரஸ் காரர்களின் பணத்தையெல்லாம், வாங்கி ஏழை எளிய மக்களுக்குச் செலவிட முன் வரவேண்டும். ஏனென்றால் இந்த நாட்டிலுள்ள பஞ்சத்தைப் போக்கடிக்க வேண்டிய பணம் பணக்காரர்களிடம்தான் இருக்கிறது. அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்வதைவிட மக்களை அதிகாரத்தால் மிரட்டிப் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இதையெல்லாம் சர்க்கார் கவனிக்கவேண்டும். கனம் ராஜாஜி அவர்கள் இந்த நாட்டினுடைய உயிர் நாடி. அவர்களிடத்தில்தான் பணக்காரர்களின் உயிர் நாடி இருக்கிறது. அதேபோல ஏழைகளின் உயிர் நாடியும் அவரிடத்தில் தான் இருக்கிறது. எல்லோரும் அவரிடத்தில் நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். எப்படியாவது இந்தப் பஞ்சத்தை அவர் மனது வைத்தால் தான் தீர்க்கமுடியும். அவருக்கு நல்ல கல்வி அறிவும், தர்ம சிந்தையும் இருக்கிறது. மக்களிடத்தில் அதிக விஸ்வாசம் உடையவர். கல்வி அறிவு அதிகம் அற்ற நான் என்ன பேசியிருந்தாலும் அதைப் பொருள்படுத்தாது நான் சொன்ன விஷயங்களிலெல்லாம் அவர்கள் அதிக அக்கரை காட்ட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.''

* **Sri A. SAMBASIVAM** :—'' துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தார் தயாரித்துள்ள வரவு செலவுதிட்டத்தைப் பாராட்டி நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட பொருளாதார மந்தத்தால் விற்பனை வரி குறைந்து, அதே போல மழை பெய்யாத காரணத்தினால் பல இடங்களில் நிலவரியைத் தள்ளிக் கொடுத்ததால் நிலவரியும் குறைந்து, இன்னும் பஞ்சம் போன்றவற்றால் பெரும் பகுதி நமது மாகாண மக்களின் நலனை உத்தேசித்து செலவிட வேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தினால் இந்த வருஷ வரவு செலவுத்திட்டத்தில் ஒரு பெரும் பகுதி துண்டு விழுமோ அல்லது ஏதாவது புதிய வரிகள் புகுத்தப் படுமோ என்று எல்லோரும் திகைத்துக் கொண்டிருந்த காலத்தில், மக்கள் எல்லோருக்கும் இந்த வரவு செலவு திட்டம் ஓரளவு ஆறுதல் அளிக்கும்வகையில் அமைந்திருக்கிறது. அந்த வகையில் இந்தத் திட்டத்தை இவ்வவையுன் வைத்த நமது மதிப்பிற்குரிய பொருள் அமைச்சர் அவர்களை உண்மையாகவே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எல்லோரும் சொல்வது போல இந்தத் திட்டம் நிகழ்கால நடைமுறையையே மனதில் கொண்டு அமைந்திருக்கிறது. வருங்காலத்திற்காக பொருளாதாரத் துறையில் எந்தவிதமான புரட்சிகரமான மாறுதலையும் ஏற்படுத்தக் கூடிய புதிய ஏற்பாடுகள் எதுவும் துணிச்சலாகப் புகுத்தப்படவில்லையென்று பலர் கூறினார்கள். நானும் அதை உணர்கிறேன். அந்த வகையில், இந்த நெருக்கடியான நிலைமையில், இயற்கையின் எதிர்ப்புக் கிடையில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பயங்கரமான நிலைமையில், தலைமை அரசாங்கத்தின் உதவி கிடைக்குமா, கிடைக்காதா என்ற ஈரெட்டான நிலைமை நீடித்துக் கொண்டிருக்கும் காலத்தில், எங்கு பார்த்தாலும் மக்கள் பட்டினி பசியால் தவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், கல்வி அறிவு பூர்ணமாகப் பரப்பப்படாதிருக்கும் வேளையில் அரசாங்கத்தார் உடனடியாக எதை எதை கவனிக்க வேண்டுமோ அதில் தான் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். புரட்சிகரமான மாறுதல்கள் எதையும் செய்ய அவர்களுக்கு இது சரியான காலம் இல்லை என்பதையும் நான் உணர்கிறேன். இருந்தாலும் வருங்காலத்தில் இவையெல்லாம் சீர்பட்டு மறுபடியும் இந்த நாட்டில் பஞ்சம் வாராதிருக்க, வேலையில்லாத்திண்டாட்டம் இல்லாதிருக்க அத்தியாவசியமான அவசரப்புரட்சி நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் துணிச்சலாக எடுத்திருக்க வேண்டும். எப்பொழுது எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்து விட்டோமோ, அப்பொழுது

11-50 a.m.

[Sri A. Sambasivam] [18th March 1953

அந்த வாக்குரிமையைப் பெற்ற எல்லோருடைய நலனையும் எண்ணி உடனே நாம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். என் நான் இப்படிச் சொல்லுகிறேன் என்று கேட்கலாம். அதற்குக் காரணம் இது தான். பலர் நகரிலேயே வசிக்கிறார்கள். ஆனால் நாங்களோ கிராமத்தில் வசிக்கிறோம். கிராமத்தில் வசிப்பதால் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் அன்றாடம் படும் அல்லலை, துன்பத்தை, துயரத்தை காலை எழுந்தது முதல், உறங்கப் போகும் வரையில் நாங்கள் பார்ப்பதினால் எங்கள் மனம் உடனடியாக இந்தச் சர்க்கார் அவர்கள் துயரத்தைத் துடைக்க, துன்பத்தைப் போக்க, அல்லலைக்களைய ஏதாவது வழி வகுக்க மாட்டார்களா என்று தோன்றுகிறது. ஆகவே அவைகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்றால் உண்மையில் இந்த நாட்டுக்கு ஒரு புரட்சிகரமான மாறுதல்தான் வேண்டும். இப்பொழுது போகின்றபடியே சென்றால் எந்தக் காலத்திலேயும் நம் நாட்டிலுள்ள மக்களின் துன்பத்தைப் போக்கமுடியாது. அவர்களின் வாழ்க்கை நிலையை, திருத்தியமைக்க முடியாது. ஆகவே அரசாங்கத்தார் நல்ல புதிய புதிய திட்டங்களை வகுத்து இந்த நாட்டு மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த, இந்த நாட்டு மக்களின் கல்வி அறிவின்மையைப் போக்க ஏதாவது ஏற்பாட்டை செய்தாகவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முதலில் உணவுப் பிரச்னை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டாகவேண்டும். அடுத்தபடியாக கல்விப் பிரச்னைதான் இன்றியமையாதது. இன்றைக்கு கல்வித் துறையை எடுத்துக்கொண்டோமேயானால் 500 மக்களுக்கு மேற்பட்ட 3,900-க்கு மேற்பட்ட சிறிய பெரிய ஊர்களிலும் ஆரம்பப் பாடசாலைகளேயில்லையென்பதை நினைக்கின்றபொழுது சமூக உணர்ச்சி இருக்கக் கூடிய உள்ளங்கள் எல்லாம் நோகத்தான் செய்யும். ஆகவே கல்வித் துறையில் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆரம்பப் பாடசாலைகள் இல்லாத ஊர்களேயிருக்கக்கூடாது. ஆங்காங்கேயிருக்கக் கூடிய ஜனத்தொகைக்கு ஏற்றவாறு சர்க்கார் நேரடியாகவோ, மாவட்டக்கமகங்கள் மூலமாகவோ ஆரம்பப் பாடசாலைகள் நிறுவத்தக்க ஏற்பாட்டைச் செய்தாகவேண்டும். கல்வி மேலதிகாரிகள் இதில் சிரத்தை காட்டு மாறு செய்யவேண்டும். ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை ஆசிரியர்களுக்கும் நல்ல சம்பளம் கொடுக்கவேண்டும். இன்னும் லேபர் பள்ளிகள், இராப்பள்ளிகள் இவைகளை நல்ல முறையில் நடத்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். அவைகளுக்குச் சரியான கட்டடம் இல்லையென்று இருக்கக்கூடாது. சாவடி, பஜனை மடங்கள் போன்ற பொது இடங்களில் அவைகளை நடத்தலாம். அது மாத்திரம் அல்ல. ஒரு பக்கத்தில் நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடையாது. மற்றொரு பக்கத்தில் படித்துவிட்டுவேலையில்லாது இந்த நாட்டில் மாணவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாணவர்கள் எல்லாம் ஏன் ஆசிரியர் பயிற்சி பெற முன்வரவில்லையென்றால் முக்கியமான காரணம் நான் முன்பு சொன்னது போல ஆசிரியர்களின் நிலைமையை இந்தச் சர்க்கார் உயர்த்துவதற்கு முன்வராதது தான் என்று தோன்றுகிறது. இச்செயல் ஒரு அளவில் கல்வியை பரப்புவதற்கு வழி வகை செய்ததாகும். இதற்கு பெரிய அளவில் செலவு ஆகிவிடாது. கிராம முன்னேற்ற திட்டம் உண்மையில் மக்கள் பெரிய அளவில் முன்னேற்றம் அடையக் கூடிய வகையில் இல்லை. ஆகவே புதிதாக படித்துவரும் இளைஞர்களுக்கு சில வாரங்களுக்கு பயிற்சி கொடுத்து கிராம முன்னேற்ற வேலைகளில் ஈடுபடுத்துவதில் பயனில்லை. ஆரம்ப ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களை கிராம முன்னேற்றத்திற்குப் பயன் படுத்த வேண்டும். இன்னும் அவர்களுடைய ஊதியத்தை அதிகப்படுத்தினால் நல்லது. ரூ 50 அல்லது 60 ஆக்கி விட்டாலும் கூட இறுதியாக ஒன்றிரண்டு ஆண்டுகளில் கிராமங்களில் எவ்வளவோ முன்னேற்றத்தைக் காண முடியும். ஆகவே கண்டிப்பாக கிராமங்களிலுள்ள ஆரம்ப ஆசிரியர்களுடைய நிலைமையை உயர்த்தப்படவேண்டும். அவர்களுடைய மதிப்பும் ஊதியமும் உயர்த்தப்படவேண்டும். அதற்கு அரசாங்கம் ஏதாவது புதிய வழியை மேற்கொள்ளவேண்டும். மற்றும் அதிகாரிகள் போலீஸ்காரர்களைப் போல் மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர்களை இழிவாகப் பேசுவது வழக்கமாக இருக்கிறது. அது இன்றைக்கும் இருந்து வருகிறது. 'எழுத்தறிவித்தவன் இறைவனாவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

18th March 1953] [Sri A. Sambasivam]

மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர்களை அவமதிப்பது வருந்தத்தக்க விஷயம். ஆகவே ஏதாவது குறைகள் இருந்தால் அதை எழுத்து மூலமாக எழுதிக் கேட்க வேண்டும். ஆசிரியர்களுக்கு கண்டிப்பாக அரசாங்கம் நல்ல மதிப்புக் கொடுக்கவேண்டும். இதை மேற்பார்வையாளர்களுக்கு தெரிவித்து ஒரு முடிவு செய்யவேண்டும்.

"தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக் கூடங்கள் நாட்டில் மிகுதியாக இருக்கின்றன. இந்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்படும் பொருள் ஜில்லாபோர்டு, முனிசிபாலிடிகளுக்குக் கொடுக்கப்படும் பொருள்களைவிட மிகுதியாக இருக்கிறது. அந்தப் பள்ளிக் கூடங்களில் ஆரம்ப படிப்புகளுக்கும் மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் ஜில்லா போர்டு முனிசிபாலிடி பள்ளிக் கூடங்களுக்கு பொருள் வேண்டுமென்று கேட்டால் அரசாங்கம் உதவி தர மறுத்துவிடுகிறது. சேலம் ஜில்லா போர்டு பள்ளிக் கூடம் வைக்க அனுமதி கேட்டும் கூட அரசாங்கம் கண்டிப்பாக திறக்கக் கூடாது என்று உத்தரவு போட்டு விட்டார்கள். தனிப்பட்டவர்களுடைய பள்ளிக்கூடங்கள் 30, 36 இருக்கின்றன. அவ்விதம் இருந்தால் அப்படி ஏன் கொடுக்கிறார்கள் என்பது புரியவில்லை. தனிப்பட்டவர்கள் மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்கும்போதுகூட அவர்களுக்கு உதவி கொடுத்து விட்டு ஜில்லா போர்டு சம்பளம் வாங்காமல் உதவி கேட்டால் கொடுக்க தயங்குவதன் நிலைமையை புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் கூட ஆரம்பக் கல்விக்கு சம்பளம் வாங்காது இருக்கும்படியான ஒரு நிலைமையை ஏற்படுத்தவேண்டும்.

"உயர்தர படிப்பை எடுத்துக்கொண்டால் அவைகள் தாலூகா தலைநகரம் போன்ற நகரங்களில்தான் நடக்கின்றன. அங்கு உண்ண உணவு கிடைக்காமலும் வாழ்க்கையை நடத்த இயலாமலும் தங்களுடைய வாழ்க்கையில் கட்டுப்பாடு இல்லாமலும் ஒழுங்கற்ற முறையில் மாணவர்கள் கெட்டு வருகிறார்கள். அதனால் அவர்களுடைய வாழ்க்கை வருங்காலத்தில் கெடுப்போக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரளவு ஐந்து மைலுக்கு ஒரு உயர்தரப் பள்ளி இருந்தால் மாணவர்கள் மூன்று மைல்கள் நடந்து சென்று படித்து விட்டு திரும்பி வீடு வந்து தாய் தகப்பனுருடன் சேர்ந்து வாழ்ந்து கட்டுப்பாடுள்ள நிலையில் இருக்க ஏற்படும். அதனால் படிப்பிற்கும், பங்கம் இல்லாமல் கட்டுப்பாட்டுடன் வாழ வசதி ஏற்படும். அப்படி பள்ளிக்கூடங்களை அமைத்தால் அதிக செலவும் ஒன்றும் ஆகாது. சாதாரணமாக குழந்தைகள் படிக்கவேண்டுமானால் உயர்தர பள்ளிக்கூடங்களை ஐந்து மைலுக்கு ஒன்று என்று அமைக்கவேண்டும். இதனால் அரசாங்கத்திற்கு பெரும் செலவு ஒன்றும் ஏற்படாது. நகரங்களிலிருக்கும் 10, 20 வகுப்புகளில் நான்கு வகுப்புக்களை மாற்றி அமைக்கவேண்டும். தலைமை ஆசிரியர்களுக்கும் இன்னும் மற்ற ஆசிரியர்களுக்கும் சிறிது ஊதியத்தை அதிகப்படுத்திக் கொடுத்தால் போதும். அதிகம் பொருள் செலவு ஒன்றும் ஏற்படாது. ஆகவே உயர்தர பள்ளிக்கூடங்களை ஐந்து மைலுக்கு ஒன்று வைத்துக்கொடுத்து எல்லோருக்கும் வசதியை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும்.

"அடுத்தபடியாக இந்த அரசாங்கம் மலர்ச்சி அடைந்த பிறகும் நாட்டில் ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை மாறவில்லை. ஒரளவு பார்க்கப்போனால் ஆங்கில அரசாங்கம் நடந்தபோது தமிழ் ஆசிரியர்கள் ரூ. 45 ஊதியம் பெற்றார்கள். இன்றைக்கு நம் அரசாங்கத்தில் ரூ. 40 ஊதியம் வாங்குகிறார்கள். இதைப் பார்த்தால் உண்மையிலேயே தமிழ் ஆசிரியர்களை புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று சொல்லவேண்டியதாக இருக்கிறதே யொழிய வேறு ஒன்றும் இல்லை. நம்முடைய பழய தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியவைகளை படித்து வந்தவர்களுக்கு நாம் கொடுக்கும் ஊதியம் போதாது. அதைப் பார்த்தால் வெகு அவமானமாகவே இருக்கிறது. இதை மந்திரிகள் கவனிக்கவேண்டும். ஆகவே நம்முடைய நாடு நம்முடைய மொழி என்று சொல்லவேண்டுமென்றால் பழய புலவர்கள் உயர்ந்த நிலையில் இருக்கவேண்டும். தாலூகா நகரங்களிலும் காலேஜ்களிலும் செகண்டரி பள்ளிக்கூடங்களிலும் தமிழ் பண்பாடு உயரவேண்டும். தமிழை நம் அரசாங்கம் புறக்கணிக்கப்படும்படியாக விடக் 12 noor.

[Sri A. Sambasivam] [18th March 1953

கூடாது. இப்பொழுது நடந்து வருவதைப் பார்த்தால் ரொம்பவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. நடுத்தர பள்ளிக்கூடங்களிலிருக்கும் இந்த தமிழ் ஆசிரியர்களின் நிலைமையை கண்டிப்பாக உயர்த்தவேண்டும். 1936-ம் வருஷத்திலேயே நமது மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் 'தமிழ் தனித்து இயங்க முடியுமா' என்ற ஒரு நூல் எழுதி இருக்கிறார். நம் முடைய படிப்பை ஓரளவு தமிழிலேயே கற்பிக்கமுடியும். அவ்விதம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு நமது பல்கலைக் கழகத்தில் தமிழை எந்த அளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள். தமிழிலேயே எல்லா பாடங்களையும் கற்பிக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. உண்மையிலேயே ராஜாஜி அந்த நூலை எழுதி 17 வருஷங்களாகின்றன. இந்த 17 வருஷமாக ஒரு முயற்சி எடுத்துக்கொண்டிருந்தால் இந்தத் தமிழை மிகமிக வளம்பெறக்கூடியதாக செய்திருக்கமுடியும்.

"அடுத்தபடியாக தமிழை வளர்ப்பதற்கு தனியாக ஒரு குழுவை அமைத்து நாட்டில் தமிழை வளர்ப்பதற்கு புலவர்களை அரசாங்கம் தூண்ட வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"பொதுவாக எல்லாரும் பேசியதைக் குறித்துக்கொண்டிருந்தேன். Administration விஷயமாக 47 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு தொகை செலவழிப்பது ஏன் என்று தெரியவில்லை. தாசில்தார் முதலியவர்களுக்கு குறிப்பிட்ட அளவில் (F.T.) பிரயாணப்படி கொடுக்கிறார்கள். ஆனால் மற்றவர்களுக்கு அதிகமாகக் (M.T.A.) கொடுக்கிறார்கள். இந்த வகையில் பிரயாணச் செலவு அதிகமாக செலவாகி வருகிறது. இந்த வகையில் சரிப்படுத்தினால் இந்த வரவு செலவை சரிக்கட்டமுடியும். அவைகளை குறைந்த அளவில் செலவு செய்யவேணடும்.

"சென்ற நூற்றாண்டில் ராமலிங்க சுவாமிகள் பாடிய பாட்டு ஒன்று என் ஞாபகத்திற்கு வருகிறது. அவர் 'வாடிய பயிர்கள்' என்று ஆரம்பித்து ஒரு பாட்டு பாடியிருக்கிறார். இன்றைக்கும் நாட்டில் அந்நிலை மாறவில்லை. அவைகளை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் தக்க முயற்சி எடுத்துக் கொள்ள வண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கடைசியாக எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI K. T. RAJU :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தசபையில் நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் இந்த 1953-54 வருஷ பட்ஜெட் பற்றி கடந்த இரண்டு மூன்று தினங்களாக பொதுவிவாதம் நடந்து கொண்டிருக்கிறது. சர்க்கார் தரப்பிலிருக்கும் அங்கத்தினர்கள் முதலில் பேச ஆரம்பிக்கும்பொழுது இந்த பட்ஜெட்டை வரவேற்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் கடைசியில் முடிக்கும் பொழுது இதை ஆதரிப்பதாகவே தெரியவில்லை. இது 1953-ம் வருட மாடல்போலும். கடைசியாகப் பேசிய சர்க்கார் தரப்பு அங்கத்தினர் முதலில் இதை ஆதரிப்பதாக நினைத்தோம். ஆனால் அவர் பிறகு ராமலிங்க சுவாமிகளின் பாடலைக் குறிப்பிட்டு முடித்தபோது இந்த பட்ஜெட்டை அவர் எதிர்ப்பதாகவே தோன்றுகிறது. என்னைப் பொறுத்தமட்டில் இந்த பட்ஜெட்டை ஆதரிக்கமுடியாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த அளவில் சிலவற்றை நான் குறிப்பிடுகிறேன்.

"தமிழகத்திலே பல ஜில்லாக்களில் பஞ்சம் பரவி இருக்கிறது. மேலும் பல இடங்களுக்கும் பரவும் அபாயம் இருக்கிறது. கோயம்பத்தூர் ஜில்லா இப்பொழுது பஞ்சப்பிரதேசமாக இருக்கிறது. விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தக்காவிக் கடனாக சென்ற வருஷம் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வருஷம் 1½ கோடி ரூபாய்தான் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பஞ்சகாலத்தில் விவசாயிகளுக்கு அதிக நிவாரணம் அளிப்பது போய் தக்காவிக் கடனைக் குறைத்திருப்பது என்ன நியாயம் என்று கேட்கிறேன். ஏற்கெனவே இந்த ராஜ்யத்தில் மழையின்மையால் பஞ்சம் பரவி இருக்கிறது என்று எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை யாருமே மறுக்கவில்லை. சென்ற நான்கு ஐந்து ஆண்டுகளாக

18th March 1953] [Sri K. T. Raju]

மழை இல்லா காரணத்தால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய நிலங்களையும் இதர சாமான்களையும் அடமானம் வைத்து கடன் வாங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு வருமானம் இல்லாததால் மேலும் மேலும் கடன் வாங்க வேண்டிவருகிறது. கடைசியில் நிலம் ஏலத்திற்கு விடப்படுகிறது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏன் கடன் வசூலை ஒத்தி வைக்கக்கூடாது. இவர்களின் நெருக்கடியை சமாளிக்க உடனடியாக கடன் ஒத்திவைப்பு மசோதா ஒன்றை ஏன் சர்க்கார் கொண்டு வரக்கூடாது. இதற்கான எந்த விதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை. விவசாயிகள் அவர்களுடைய கஷ்டத்தைப்போக்க மேற்கோண்டு சர்க்கார் கடன் கொடுத்து உதவவில்லை என்றால் அவர்கள் லேவாதேவிக்காரர்களிடம் போக வேண்டியிருக்கும். அதிக வட்டிக்கு பணம் வாங்க நிர்ப்பந்திக்கப் படுவார்கள். உடனடியாக இந்த விவசாயிகளுக்கு சகல விதமான உதவியும் சர்க்கார் செய்யமுன்வர வேண்டும். அப்படி சர்க்கார் செய்யவில்லையென்றால் அவர்கள் தங்கள் நிலங்களை இழந்து கிராமத்தை விட்டே வெளியேற வேண்டிஇருக்கும். ஏற்கனவே நூற்றுக்கணக்கான விவசாயிகள் தங்கள் கிராமத்தை விட்டு நகரங்களுக்குக் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விவசாயிகளை இன்று நாம் பாதுகாக்க வல்லை யென்றால் வருங்காலத்தில் மழைபெய்தாலும் விவசாயம் செய்வதற்கு குடியானவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள். இதனால் நாட்டின் பொருளாதாரமே பெரும் அளவுக்கு பாதிக்கும் என்பதை சர்க்கார் உணரவேண்டும்.

"இவைகளை யெல்லாம் எடுத்துச் சொன்னால் எதிர்க்கட்சிகாரர்கள் மிகைப்படுத்திச் சொல்லுவதாக சர்க்கார் தரப்பு அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். இவ்விதம் சர்க்கார் தரப்பு அங்கத்தினர்கள் உண்மையை மறைத்து கூறுவதன் மூலம் தங்கள் சர்க்காரைப் பாதுகாப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். அதேசமயத்தில் அவர்கள் இப்படி உண்மையை மறைப்பதின் மூலம் தங்கள் நாட்டிற்கும் சர்க்காருக்கும் தீங்கு செய்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. இன்று சென்னை சர்க்காரே இந்த ராஜ்யம் மிகவும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய சர்க்கார் உதவியினால்தான் இந்த ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை சமாளிக்கமுடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் சர்க்கார் தரப்பு அங்கத்தினர்கள் பலர் பஞ்சம் இல்லை என்றும் எதிர்க்கட்சிக்காரர்கள் மிகைப்படுத்திச் சொல்லுகிறார்கள் என்றும் சொன்னால் மத்திய சர்க்கார் இந்த ராஜ்யத்தைப்பற்றி என்ன நினைப்பார்கள், உண்மையில் சென்னை ராஜ்யத்தில் நெருக்கடி இல்லை. எதிர்க்கட்சிகாரர்கள் வேண்டுமென்றே சொல்லுகிறார்கள் என்றுதானே அவர்கள் கருதுவார்கள். எனவே இந்த ராஜ்யத்திற்கு உதவி தேவையில்லை என்று மத்திய சர்க்கார் சொல்லிவிடுவார்கள். எனவே சர்க்கார் தரப்பு அங்கத்தினர்களே இது போல் உண்மையை மறுத்து பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்று இந்த சபையில் நாட்டில் பஞ்சமில்லை என்று சொல்லும் சர்க்கார் தரப்பு அங்கத்தினர்கள் அவர்கள் தொகுதியில் சென்று மக்களிடத்தில் இவ்விதம் சொல்லுவார்களா என்று கேட்கிறேன். சென்ற வருடம் நில அடமான பாங்குகளுக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் கொடுத்து வந்த லோனில் இந்த வருடம் 1½ கோடி ரூபாய் குறைத்து விட்டார்கள். விவசாயிகளுக்கு பெரிய அளவில் கஷ்டம் ஏற்பட்டிப்பதாக ஒப்புக்கொள்ளும் சர்க்கார் மேற்கொண்டு அதிக உதவி செய்வதை விட்டு இருப்பதிலும் குறைத்து விட்டதானது உண்மையில் இந்த சர்க்கார் விவசாயிகளுக்கு மிகப்பெரிய துரோகம் செய்ததாகிறது என்றுதான் சொல்ல வேண்டும். தக்காவிக்கடன்களுக்காக சென்ற வருஷம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் சர்க்காருக்கு மனு செய்துக் கொண்டார்கள். ஆனால் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு கடன் கிடைக்கவில்லை. காரணம் பணமில்லை. சென்ற வருடம் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த பொழுதே இவ்வித நிலைமை என்றால் இந்த வருடம் 1½ கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கும் போது மேலும் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதை இந்த சபை கவனிக்க வேண்டும். இன்றைய தினம் இந்த சர்க்கார் தங்கள் செலவுக்கு எவ்வளவு வரிபோட முடியுமோ அவ்வளவு வரியும் மக்களின்மேல்

12-10 p.m.

[Sri K. T. Raju] [18th March 1953

போட்டாய்விட்டது. இனி எந்தவிதமான புதிய வரிகளும் போடுவதற்கு வழி கிடையாது. மத்திய சர்க்கார் சென்ற வருடத்தில் ராஜ்யங்களுக்கு உணவு மான்யமாக 21 கோடி ரூபாய் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அதையும் நிறுத்திவிட்டார்கள். இதனால் உணவுப்பொருள்களின் விலை 50 சத வீதம் உயர்ந்து விட்டது. இதனால் தொழிலாளர்களும் பொதுமக்களும் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உணவுப்பொருள்களுக்கு மான்யத்தை நிறுத்திவிட்ட மத்திய சர்க்கார் அதேசமயத்தில் சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு மான்யமாக 4½ கோடிரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இந்த சென்னை ராஜ்யம் பஞ்சத்தில் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையென்று ஒப்புக்கொள்ளும் மத்திய சர்க்கார் உடனடியாக பண உதவி செய்வதற்கு முன் வராமல் அசட்டையாக இருப்பது வருந்ததக்கது. மத்திய சர்க்காரிடமிருந்து உதவி வரவேண்டும் என்று கேட்பதில் நமது மந்திரிகள் ஒரு சமயம் பின் வாங்கலாம். ஆனால் சர்க்கார் தரப்பிலிருக்கும் அதிகாரிகளிடம் இது விஷயத்தில் என் கடுமையாகச்சொல்லக்கூடாது என்று கேட்கிறேன். இது விஷயத்திலாவது எங்களோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லை என்றால் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியை சமாளிக்க முடியாது என்பதையும் இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சில வருடங்களுக்கு முன் கோயமுத்தூர் ஜில்லா உடுமலைபேட்டை தாலூகாவில் அமராவதி அணைக்கட்டு திட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அதற்கு விவசாயிகளும் சர்க்காருக்குப் பணஉதவி செய்யவேண்டும் என்று சென்னை சர்க்கார் கேட்டுக்கொண்டது. விவசாயிகளும் எப்படியாவது அணை கட்டினால் போதும் என்று கருதி தங்களிடத்தில் பணமில்லாவிட்டாலும் வட்டிக்குப் பணம் வாங்கி 6 லட்ச ரூபாய் சர்க்காரிடத்தில் கொடுத்தார்கள். ஆனால் இது வரையிலும் அந்த திட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இந்த வருடத்திலாவது ஆரம்பிப்பார்கள் என்று விவசாயிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த வருடமும் விவசாயிகள் ஏமாற்றப்பட்டார்கள். சர்க்காரிடம் கொடுத்தபணத்திற்கு விவசாயிகள் தாங்கள் வாங்கிய நபர்களுக்கு வட்டி கொடுத்து வருகிறார்கள். இது உண்மையில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளை மேலும் எந்த அளவுக்குபாதிக்கும் என்பதை சர்க்கார் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஒன்று திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும், அல்லது அவர்களிடத்தில் வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுக்க வேண்டும். முடிந்தால் ஆறு லட்சரூபாயைத் திருப்பி அவர்களிடமே கொடுத்து விடவேண்டும்.

"இந்த அமராவதி திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதின் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கமுடியும் கோவை ஜில்லாவிற்கு இதை ஒரு பஞ்ச நிவாரணவேலையாக எடுத்துக்கொள்ளலாம். இந்த திட்டம் நிறைவேறினால் 17,000 ஏகர் நிலம் பாசனத்திற்கு வரும். அடிக்கடி பஞ்சத்தால் பாதிக்கப்படும் கோவை ஜில்லா விவசாயிகளுக்கும் இது ஒரு உதவியாக இருக்கும்.

"இந்த சர்க்கார் மக்களை பாதுகாக்க இந்த குறைந்தபட்சம் திட்டத்தைகூட நடைமுறைக்குக் கொண்டுவர மறுக்கிறது. பஞ்சத்தைப் போக்க தாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருவதாக வாயளவில் சொல்லிக்கொண்டிருந்தால் போதாது. நடைமுறையில் காண்பிக்கவேண்டும் உடுமலைப்பேட்டையில் இன்று குடிதண்ணீருக்கு ஒரு குடம் ஒன்றுக்கு இரண்டு அணா கொடுக்கவேண்டும். எப்பொழுதும் இங்கு குடி தண்ணீருக்கு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த அமராவதி திட்டம் நிறைவேற்றப்பட்டால் குடிதண்ணீர் பஞ்சத்தையும் போக்கமுடியும்.

அடுத்தபடியாக மின்சாரவெட்டு, இதனால் கோயமுத்தூர் ஜில்லாவில் இருக்கிற தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் தொழிலாளர்கள் மட்டும் அல்ல. நாட்டின் உற்பத்தியும் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. தர்மல் ஸ்டேஷன் கட்ட வேண்டும் என்று சொன்னால் உடனேயே சர்க்கார் பணமில்லை என்று சொல்லி விடுகிறார்கள். பணமில்லை என்றே சொல்லிக்கொண்டிருந்தால் போதாது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும், பொதுமக்களையும், உற்பத்தியையும் பாதிக்கும் இந்த பிரச்னையில் உடனடியாக கவனம் செலுத்தவேண்டும். இந்த மின்சார

18th March 1953] [Sri K. T. Raju]

வெட்டு இந்த வருடம் மட்டுமல்ல. கடந்த பல வருடங்களாகவே இம்மாதிரியான நிலை தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நமது மின்சார நிலையங்கள் யாவும் மழையை நம்பி இருக்கிறது. மழை இல்லை என்றால் மின்சாரமில்லை. எனவே மேலும் இது போன்ற அபாயம் வருடாவருடம் வந்து கொண்டிருப்பதைத் தடுக்க தர்மல் ஸ்டேஷன் தேவை. இதற்கு மத்திய சர்க்காரிடமும், கடன் வாங்கியும் திட்டத்தை நிறைவேற்றவேண்டும். இன்று மில்லில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் மின்சார வெட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாரத்தில் மூன்று தினங்களுக்குக்கூட வேலை யில்லை. இவர்கள் எப்படி தங்கள் வாழ்க்கையை நடத்தமுடியும், எனவே இவர்களுக்கு நஷ்டஈடாக பணம் கொடுத்தாகவேண்டும். இம்மாதிரி தொழில் நுணுக்கம் தெரிந்த தொழிலாளர்களைப் பட்டினியால் மடிய விடுவது நாட்டிற்குப் பெரிய ஆபத்து. ஆகையால் சர்க்காரும் மில்முதலாளிகளும் சேர்ந்து உடனடியாக இவர்களுக்கு நஷ்டஈடாகக்கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்றைய தினம் மழை பெய்யாததால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு நாம் உதவி செய்தாகவேண்டும். அது அரசாங்கத்தின் கடமை. நாட்டை ஆள்வோரின் கடமையாகும். அரசாங்க மந்திரிகளாயினும் சரி, சட்டசபை அங்கத்தினர்களாயினும் சரி இதற்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் பல இடங்களில் பல தொழிலாளர்கள் தங்கள் நியாயமான குறைகளை நிவர்த்தி செய்துக் கொள்வதற்காக கிளர்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை சமரசம் செய்து வைக்க நாங்கள் சென்றால் நாங்கள் கம்யூனிஸ்டுகள், அவர்களை நாங்கள் தான் தூண்டி விடுகிறோம் என்று எங்களுக்கு தடை விதிக்கிறார்கள். இந்த சர்க்கார் மிராசுதாரர்களுக்கு நஷ்டஈட்டை உடனடியாகக் கொடுப்பதற்கும் மில் முதலாளிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய க்ஷேமத்தையும் பாதுகாக்க போலீஸ் படையை முன்னணியில் வைத்துக் கொண்டு முன்னுக்கு வருகிறதே தவிர நியாயமான குறைகளை, மக்களின் துன்பங்களை விவசாயிகளின் கஷ்டமான நிலையை நீக்கவோ, போக்கவோ, முன் வரவில்லை. எனவே இந்த நிலையில் சர்க்கார் கொள்கை சென்று கொண்டிருக்கும் பொழுது தொழிலாளர்களின் நன்மைகள் ஒரு பக்கத்தில் புறக்கணிக்கத்தான் படும் என்பதில் விந்தை எதுவுமில்லை. எப்படியாவது குறைந்த பட்சமாவது இவர்களின் குறைகளை நீக்க சர்க்கார் உடனடியாக முன் வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயுள்ள சுமுகமான உறவுநிலைமை நாளடைவில் பெரிதும் பாதிக்கப்படு மென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

"அடுத்த படியாக கஞ்சித்தொட்டிகளை எடுத்துக் கொள்ளுவோம். பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டு மென்றுதான் கஞ்சித்தொட்டிகளை ஆரம்பிக்கிறார்கள். எனது தொகுதியில் பஞ்ச நிலைமை அதிகமாக இருந்த கைத்தறித் தொழிலாளர்கள் வசிக்கும் சித்தோடு என்ற கிராமத்தில் ஒரு கஞ்சித்தொட்டியை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடந்தது. திறப்பு விழா அன்று R. D. O. வராததன் காரணமாக அந்த கஞ்சித் தொட்டியை நான் திறந்து வைத்தேன். நான் திறந்து வைத்த முகூர்த்தமோ என்னவோ அதை 28 நாட்களிலேயே மூடிவிட்டார்கள். ஸ்டாக் இல்லாமல் மூடப்படவில்லை ரஷ்யாவிலிருந்து நமது நாட்டில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு கோதுமையும் அரிசியும் செஞ்சிலுவை சங்கத்தின் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டது. இந்த தானியங்கள் இன்னும் மூன்று மாதத்துக்கு கைவசம் இருக்கிறது என்று கோவை ஜில்லா கலெக்டர் சொல்லியிருக்கிறார். இருப்பினும் அந்த சரக்குகளை எல்லாம் வேறு இடங்களுக்கு எடுத்துக் கொண்டு சென்று விட்டு இந்த கஞ்சித் தொட்டியை மூடி விட்டார்கள். இது நியாய மில்லை. இதைப்பற்றி நான் R. D. O. விடம் கேட்டபோது அவர் இது சர்க்கார் உத்தரவு என்று சொல்லி விட்டார். சர்க்கார் ஏன் இது மாதிரியாக செய்தது என்றுதான் எனக்கு இதுவரையிலும் தெரிய வில்லை. கஞ்சித்தொட்டிகளை ஏற்படுத்தும்போது ஐந்து மைல் விஸ்தீர்ணத்தில் தான்

[Sri K. T. Raju] [18th March 1953

வைக்கிறார்கள். நடக்க முடியாத நிலைமையில் இருக்கின்ற மக்கள் ஐந்து மைல் நடந்து சென்று கஞ்சித் தொட்டிக்கு போக வேண்டு மென்றால் அவர்கள் போக வர பத்து மைல்கள் நடக்க வேண்டும். ஆகவே கஞ்சித் தொட்டிக்கு நடந்து சென்று ஒரு வாய்க் கஞ்சியைக் குடிப்பதை விட பச்சைத் தண்ணீரையே குடித்து விட்டு மரத்தடியில் படுத்து மடிந்து விட அவர்கள் தயாராய் இருக்கிறார்கள். கஞ்சித் தொட்டிக்கு போவோர் எல்லாம் கர்ப்பிணிகள், குழந்தைகள், நெசவாளர்கள்தான். ஹரிஜனங்களை அங்கு அனுமதிப்பதில்லை கோயமுத்தூர் ஜில்லாவில் குறிப்பாக ஹரிஜனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடியானவர்களே அனுவு இல்லாமல் கஷ்ட படும் போது அந்த குடியானவர்களை அண்டிப் பிழைக்கும் இந்த ஹரி ஜனங்கள் நிலை எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பார்க்கும் படி இந்த சபையில் உள்ளவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ரஷ்யாவிலிருந்து நமக்கு அனுப்பிய உணவுப் பொருள்களை கஞ்சியாகக் காய்ச்சிக் கொடுக்கக்கூட இந்த சர்க்காருக்கு முடியவில்லை.

"என்னுடைய தொகுதியில் பெரும்பான்மையானவர்கள் நெசவுத் தொழிலாளர்கள், துடும்பதி நசியனூர், கரஞ்சிக்கோவில், பெரிய வீரசங்கலி, ஆயிகவுண்டன் பாளையம் போன்ற கிராமங்களில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் வசிக்கும் இடங்களில் உடனடியாகக் கஞ்சித் தொட்டி வைக்கவேண்டும். இந்தக் கஞ்சித் தொட்டியில் ஹரிஜனங்களுக்கும் கஞ்சி கொடுக்க வேண்டும், பொதுவாக எனது தொகுதியில் பெரும் பான்மையான கிராமங்களில் குடி தண்ணீர் வசதி கிடையாது. பாசன வசதியுள்ள கிணறுகள் எல்லாம் இன்றைய தினம் வறண்டு கிடக்கின்றன. சிறுதண்ணீர் இருக்கும் தோட்டங்களுக்கு யாராவது தண்ணீருக்குச் சென்றால் அவர்கள் அனுமதிப்பதில்லை. காரணம் அவர்களுக்கே தண்ணீர் போதாமல் இருக்கும் பொழுது எப்படி மற்றவர்களை அவர்கள் அனுமதிப் பார்கள். எனவே இம்மாதிரி நிலையில் இருக்கும் அந்த கிராம மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க உடனடியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"எனது தொகுதி. பெருந்துறை பிர்க்காவில் சுமார் 700 கிணறுகள் இருக்கின்றன. இவைகள் யாவும் தோட்டக் கிணறுகள். இப்பொழுது இவைகளில் தண்ணீர் கிடையாது. மூன்று அல்லது நான்கு முழம் கிணற்றை வெட்டினால் தண்ணீர் கிடைக்கும். அதனால் புஞ்சை தானியங்களைப் பயிர் செய்யலாம். ஒரு கிணறு வெட்ட குறைந்தது ரூ. 500 பிடிக்கும். உண்மையில் சர்க்கார் உணவுப் பஞ்சத்தைப் போக்க வேண்டும், விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்பது உண்மையானால் இந்த விவசாயிகளுக்கு உடனடியாக கிணறு வெட்ட பண உதவி செய்ய முன் வர வேண்டும்.

"இன்று விவசாயிகள் பெரிய கடன்காரர்களாகி அவர்களின் நிலங்கள் எல்லாம் லேவாதேவிக்காரர்கள் கையில் போய் விடக் கூடிய ஆபத்தான நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்த நிலங்களைப் பாதுகாக்க உடனடியாக ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தக்காவிக்கடனுக்காக ஒதுக்கப் பட்டிருக்கும் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் போதாது. மேற்கொண்டும் அதிகப் பணத்தை ஒதுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

"முடிவாக கிராமத்தில் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் புஞ்சை தானியங்களையாவது நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகிக்க வேண்டும். இல்லா விட்டால் நூற்றுக் கணக்கான குடியானவர்கள் பட்டினியால் மடிய வேண்டிவரும்.

"இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

12–20 p.m. SRI K. S. LAKSHMIPATHI NAICKER :—"உதவிச் சபாநாயகர் அவர்களே; சபை முனபு வைக்கப்பட்டு இரண்டு நாளாக விவாதிக்கப் பட்டுவரும் வரவு செலவு திட்டத்தைப் பற்றி நான் செல்ல வார்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வரவு செலவு திட்டத்தை இன்றைய

18th March 1953] [Sri K. S. Lakshmipathi Naicker]

தினம் இந்த அரசாங்கம் சபை முன்பு வைத்திருக்கிறதென்றால், எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் ராஜ்யத்தின் வரவு செலவு திட்டத்தை தயாரித்து சபை முன்பு வைத்து அதற்கு சபையின் அதிகாரத்தை வாங்கிக்கொண்டு பின்னர் தான் அந்த திட்டப்படி செலவு செய்யவேண்டுமென்பதே கொள்கை. அப்படியிருக்கும்பொழுது இப்பொழுது சபை முன்பு இருக்கும் வரவு செலவு திட்டத்தில் எந்த விஷயமும் ஆதரிப்பதற்கு இல்லையென்று பொதுவாக பல அங்கத்தினர்கள் ஒரேயடியாகக் குற்றத்தைத்தான் சாட்டினார்கள். குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லுவதற்காகத்தானே சபை முன்பு வைத்திருக்கிறார்கள். ஆகவே நான் வெறும் குற்றத்தை மாத்திரம் எடுத்துக்காட்ட விரும்பவில்லை. சர்க்கார் இதை நீக்கி இந்தமாதிரியாகச் செலவு செய்தால் மிகவும் நன்றாக இருக்குமென்று நான் சொல்லி, அதனால் உண்மையாகவே சரக்கார் அந்த யோசனைப்படி நடந்தால் பலன் உண்டாகும் வழியையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அரசாங்க வரவு செலவுகளைத் தயாரித்து அதை புஸ்தக ரூபத்தில் நிதிமந்திரி அவர்கள் இப்பொழுது சமர்ப்பித்திருக்கிறார். இந்த பட்ஜெட்டில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன குறைபாடுகளை எடுத்துக் காட்டும்பொழுது சர்க்கார் அதை நீக்க முன்வர வேண்டுமே தவிர தங்களுக்கு உள்ள மெஜாரிட்டியைக் கொண்டு இதையே பாஸ் செய்துகொண்டு போவதென்றால் இப்பொழுது நாம் எல்லோரும் விவாதம் செய்வதில் எந்தவித்தமான அர்த்தமும் இல்லை. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள் என்ற காரணத்திற்காக உண்மையை மறக்காமல் நியாயமானவற்றை உடனடியாக சர்க்கார் எடுத்துக்கொண்டு அதை நடைமுறையில் அமுல் நடத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். ஆனால் இந்த உண்மையான கண்ணோட்டத்தை அடிப்படையாகக்கொண்டு இது இன்றைய தினம் சட்டசபையின் முன்பு வைக்கப்பட்டிருக்கிறதா என்று நாம் எல்லோரும் பார்க்கவேண்டும். சட்டசபையில் நடக்கும் விவாதங்களை சர்க்கார் நன்கு புரிந்துகொண்டு நடக்காமல் தங்கள் இஷ்டப்படியே எந்தக் காரியத்தையும் நடத்துவதென்றால் அதில் அர்த்த மயிலலை. ஆகவே சர்க்கார் அங்கத்தினர்கள் கூறும் யோசனையை எடுத்துக் கொள்ளுவார்கள் என்ற யோசனையுடன் கூடவே சில குறைபாடுகளை மாத்திரம் நான் எடுத்துச் சுட்டிக்காட்டி அதற்காக பரிகாரத்தையும் கூற விரும்புகிறேன்.

"சர்க்காரின் அடிப்படை இன்றையதினம் எப்படியிருக்கிறதென்று நாம் பார்க்கவேண்டும். குறிப்பாக ஒரு கட்டடம் அழகாக நெடுநாள் நன்றாக இருக்கவேண்டுமென்றால் அந்தக் கட்டடத்தைக் கட்டும்பொழுது அதிக ஆழம் அஸ்திவாரம்போட்டு, கட்டடத்தைக் கட்டும்பொழுது நல்ல காரையையும், சிமட்டியையும் உபயோகித்துக் கட்டவேண்டும். பணம் செலவாகிறதே என்று பார்க்கக்கூடாது. அதேபோல அரசாங்கக் கட்டடத்தைக் கட்டவேண்டுமென்றால் அஸ்திவாரமே யில்லாது, நல்ல உரமிக்க செங்கலை உபயோகிக்காது, வேகாத கற்களைக்கொண்டு காரை சிமிட்டியின்றி கட்டிடத்தின்மேல் பலம் வாய்ந்த ஸ்ரீ ராஜகோபலாச்சாரியார் என்ற சிகரத்தை மாத்திரம் வைத்துவிட்டால் அரசாங்கம் நடந்துவிடுமென்று யாரும் கருதக்கூடாது. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் தகர்ந்தே போகும். ஆகவே கட்டடம் தகராமல் இருக்கவேண்டுமென்றால் அடிப்படை அஸ்திவாரமாகிய ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமையையும், அரசாங்க கட்டடத்தின் கற்களாகிய அரசாங்க என். ஜி. ஒ.-க்களின் குறைபாடுகளையும் உடனடியாக நீக்க சர்க்கார் முன்வந்தாகவேண்டும். கிராம அதிகாரிகளிலிருந்து பெரிய உத்தியோகஸ்தர்கள் வரை அரசாங்கத்தின் கட்டடத்திற்கு அவசியமானவர்கள். உணவு தானியப்பொருளை உற்பத்தி செய்துகொண்டு வரக்கூடிய விவசாய மக்கள் தான் அரசாங்கக் கட்டடத்தின் தூண்கள். அவர்கள் எல்லோரும் நல்ல நிலைமையில் இருப்பார்களேயானால் அன்றைய தினம்தான் அரசாங்கம் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறதென்று அர்த்தமாகும். அவர்கள் க்ஷேமமாக, ஊக்கமாக, உற்சாகமாக வாழ்வார்களேயானால் அன்றையதினமே அரசாங்கக் கட்டடத்தின் அஸ்திவாரம் பலமாக இருக்கிறதென்று அர்த்தமாகும். ஆனால் இப்படியாகப் பார்க்கப்போனால் இந்த வருஷ பட்ஜெட்டிலே கிராம

[Sri K. S. Lakshmipathi Naicker] [18th March 1953

அதிகாரியின் நலனைக்குறித்து எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்பட வில்லை. விவசாய மக்கள் இன்றைய தினம் பட்டினியால் செத்துக்கொண் டிருக்கிறார்கள். கனம் ராஜகோபாலாச்சாரியாரின் ஆட்சியில் யாரும் பட்டினி யால் செத்தார்கள் என்று பெயர் வரக்கூடாதென்று எண்ணி அரசாங்க அதிகாரிகள் இந்த உண்மையை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் பல அங்கத்தினர்கள் சொல்லியதுபோல கிராமப் புறங்களிலே மக்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்க ளுடைய நிலைமையையெல்லாம் சர்க்கார் கொஞ்சம்கூட கவனிக்கவில்லை. அவர்களுடைய துன்பத்திற்கு அனுதாபம்கூட இந்த சர்க்கார் தெரிவித்துக் கொள்வதாகத் தெரியவில்லை. உண்மையிலேயே பல கிராமங்களில் ஜனங்கள் பட்டினியால் செத்துக் கொண்டு தானிருக்கிறார்கள். அதற்கு பதில் சொல்லும் போது தூங்கிக் கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து படம் பிடித்து பட்டினியால் செத்துவிட்டார்கள் என்று சொல்லுவதாக சொல்லுகிறார்கள். ஆகையால் கிராமங்களில் சித்திரக் கற்பனை இருக்கிறது என்று சொல்லுவதாக இருக்கிறது. இவ்விதம் சொல்லும்படியாக கிராமங்களில் கிராம மக்களுக்கு சித்தரக் கற்பனை இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். உண்மையாகவே நேரில் கொண்டுபோய் காண்பித்தாலும் அதை மறுக்கிறார்கள். இந்த நிலைமையை கிராமங்களில் போய் சொன்னால் உண்மையிலேயே விரும்பு வார்களா என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். உண்மையிலேயே பேசும் போது சர்க்கார் பஞ்சத்தைப் போக்குவதற்கு அதிகமாக பணம் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாக ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பசுவானது நல்ல பால் கரந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஆகாரம் போஷணை இல்லாமல் இருந்தால் அது எவ்வளவு நாட்களுக்குத் தான் நல்ல பால் கொடுக்கும். அவ்விதம் அதற்கு நல்ல ஆகாரம் போட்டு போஷணை செய்து வந்தால் தான் அது நல்ல பால் கொடுக்கும். அம்மாதிரி தான் விவசாயிகளுடைய உதவியும். இப்பொழுது நாலு கோடி ரூபாய் மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த விவசாயிகளை உத்தேசித்து தான் அவர்கள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இந்த விவசாயிகளுக்கு இது வரையில் ஒன்றும் செய்யவில்லை. எந்த விதமான நன்மையும் செய்யவில்லை. பசுவை போஷித்தால் தான் அதிகமான பால் கரக்கலாம். மேலும் மேலும் அவர்கள் மீது வரியை சுமத்திக்கொண்டே போனால் அவர்களால் தாங்க முடியாது. இந்த வரவு செலவை சமாளிக்க வேண்டும் என்று வரி போட்டுக்கொண்டே போனால் அவர்களால் தாங்க முடியாது. போஷணை இல்லாத பசுவைக் கரப்பது போலாகும். நமது வீட்டிற்கு ஒரு விருந்தாளி வந்தால் பசுவை போஷித்து வைத்திருந்தால்தான் அந்த விருந்தாளி வந்தவுடன் காப்பி பால் காக்க முடியும். இல்லாவிட்டால் கொஞ்சம் கூட பால் கரக்க முடியாது. ஆகையால் இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது இந்த வரியை அவர்களுக்குப் போடாமல் மக்களுக்கு உபகாரம் செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக இப்பொழுது நகரங்களில் ஒடக்கூடிய பஸ் டிரான்ஸ் போர்ட்டை சர்க்கார் எடுத்து நடத்துகிறார்கள். எதற்காக என்றால் வருமா னத்தை உற்பத்தி செய்து கொள்ளவேண்டும் என்பதற்கும் இந்த பட்ஜெட்டை சமாளிக்கவேண்டும் என்ற காரணத்தாலும் அவர்கள் அதை எடுத்து நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதைப் போலவே விவசாயிக ளுக்கு டிராக்டர்களும் இன்னும் மற்ற விவசாயக் கருவிகளும் வாங்கி வாட கைக்கு விட்டு வரலாம். அவைகளை அப்படி வாங்கி ஒவ்வொரு ஜில்லாவிற் கும், தாலூகா விற்கும் கொடுக்க வேண்டியது அவசியம். அதன் மூல மாக சர்க்காருடைய வருமானத்தையும் அதிகப்படுத்திக் கொள்ளலாம். இரண்டாவதாக பஞ்ச நிவாரண வேலைகளை எடுத்துக்கொண்டு பல வேலைக ளைச் செய்து வருகிறார்கள். அவ்விதம் செய்து வருவதில் ரோடுகளையும் அமைத்துக்கொண்டு வருகிறார்கள். அவ்விதம் அமைத்துக்கொண்டு வரும் ரோடுகளை பின்னாடிவரும் ஜில்லா போர்டு நிர்வாகஸ்தர்கள் அவைகளை சரியாக கவனிப்பது இல்லை. அதற்கு பதிலாக சிறு சிறு குளங் களை மராமத்து செய்து அவைகளை தேக்கிக்கொண்டு வந்தால் விவசாயத் திற்கு சௌகரியமாக இருக்கும். அதிலிருந்து வருமானத்தைப் பெருக்கு வதற்கும் வழி இருக்கிறது. அதன் மூலம் அவர்களிடமிருந்து தண்ணீர்

18th March 1953] [Sri K. S. Lakshmipathi Naicker]

வரியை வசூலிக்கலாம். அவர்களும் மனமுவந்து கொடுப்பார்கள். ஆகவே டிராக்டர்களையும் பம்பு செட்டுகளையும் வாங்கி வாடகைக்கு விடுவதோடு வரிகளைக் கட்டி, குளங்களை சீர்படுத்தி, கரை போட்டு அவைகளின் மூலம் வருமானத்தை அதிகப்படுத்தலாம்.

" அடுத்தபடியாக இப்பொழுது கரை போடுவது (காண்டூர் பண்டு) என்ற விஷயம் நமது பட்ஜெட்டில் காணப்படுகிறது. இந்த காண்டூர் பண்டு வேலையை ஒவ்வொரு கிராமங்களிலும் பஞ்ச நிவாரண வேலையாக நடத்த வேண்டும். அநேகம் முக்கியமான விஷயங்களைப்பற்றி பேசவேண்டும் என்று வந்தேன். ஆனால் அவகாசம் குறைவாக இருப்பதால் சில முக்கியமான விஷயங்களை மட்டும் குறிப்பிடுகின்றன்.

" விவசாய டிபார்ட்மெண்டில் அதிகம் உற்பத்தி செய்வதற்காக டிமான்ஸ்ட்ரேஷன் purposes க்காக அதிகம் பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அது ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதற்கு அடுத்ததாக உள்ள animal husbandry கால் நடை டிபார்ட்டுமெண்டை கொஞ்சம் சொல்லவேண்டும். இந்த இலாகாக்களை முற்றிலும் கவனிக்காமல் விடப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம் நாட்டில் கால் நடை அபிவிருத்தி அடைந்தால் தான் விவசாயம் முன்னுக்கு வரும். கால் நடைகளை கவனிக்காமல் புரக்கணித்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஏன்? கால் நடைகள் வோட்டுப் போடுவதாக இருந்தால் மெம்பர்கள் அவைகளைப் பற்றியும் பேசியிருப்பார்கள், அவைகளுக்கு வாய் பேச வசதியில்லை. இருந்த போதிலும் விவசாயத்திற்கு முக்கியத்வம் அளிப்பதுபோல் கால் நடைகளையும் கவனிக்கவேண்டும். கால் நடை வைத்திருப்பவர்களுக்கு சர்க்கார் உதவி அளிக்கவேண்டும். கால் நடைகளை விருத்தி செய்வதற்கு உபகாரம் செய்யவேண்டும். அதற்காக ஒரு விதப் பணமும் ஒதுக்கவில்லை. இன்றையதினம் கோழி வளர்ப்பைப் பற்றி பேசப்படுகிறது. கோழி பண்ணைவைத்து தனிப்பட்டவர்கள் கோழிகளை வளர்ப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு சர்க்கார்-உபகாரம் கிடைப்பதில்லை. ஒரே ஒரு இடத்தில் உபகாரம் செய்துகொண்டு வருகிறார்கள். காட்பாடியில் அமெரிக்கன் மிஷன் இதற்கு சலுகைகள் காட்டிக்கொண்டு வருகிறது. கிராம வேலைகளில் ஒவ்வொன்றுக்கும் சலுகைகள் காட்டிக் கொண்டு வந்தால் உண்மையிலேயே நாம் விவசாயத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். இன்றைக்குப் பார்த்தால் ஒரு வித்தத்திலும் இந்த கால் நடைகளுக்கு சர்க்காருடைய உதவி கிடைக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமாக இதை கவனிக்க வேண்டியது சர்க்காருடைய கடமை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

" கிராமங்களில் சில இடங்களில் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை. 12–30 p.m.
நமது நாடு க்ஷேமமாக மற்ற நாடுகளுடன் வாழவேண்டுமானால் மக்கள் நல்ல திடகாத்திரர்களாக இருக்கவேண்டும். அவர்களுடைய மனது நல்ல நிலையில் இருக்கவேண்டும். கவலை இல்லாமல் வாழவேண்டும். இப்பொழுது மக்களுக்கு வீடு இல்லை. உண்ண உணவு இல்லை. உடுக்க உடை இல்லை. அவர்களுக்குக் கவலைக்கு மேல் கவலைகளைப் புகுத்திக் கொண்டிருக்கிறோம். நாளைய தினம் நமது தேசத்தை பாதுகாக்க யுத்தவீரர்கள் வேண்டும். நாடு இந்நிலையில் இருந்தால் யாரை எதற்கு எதிர் பார்க்க முடியும். இன்றையதினம் இளைஞர்களுடைய chest அளவு எந்த விதமாக இருக்கிறது என்று பார்க்கவேண்டும். அவர்கள் நல்ல ஆரோக்யமுள்ளவர்களாக இல்லை. பலவீனமாகவிருக்கிறார்கள். அநேகம் கிராமங்களில் டாக்டர்களே இல்லாமல் ஆஸ்பத்திரிகள் சும்மா இருக்கின்றன. இப்பொழுது ஜில்லாக்களில் Van-கள் இருக்கின்றன. அவசரமாக வைத்தியம் செய்வதற்கு அங்கங்கே மருந்துகளைக் கொண்டுபோவதற்கு அவைகளை உபயோகப்படுத்தலாம். எந்தந்த இடங்களில் காலரா, பிளேக் கண்டிருக்கின்றனவோ அந்த இடங்களுக்கு இந்த Van-கள் மூலமாக மருந்துகளைக் கொண்டுபோய் சிகிச்சை செய்யலாம். ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்த Van-களைக் கொண்டுபோய் வைத்து அதில் ஒரு டாக்டரை அனுப்பிவைத்து சிகிச்சை செய்யலாம். இவ்விதம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று பிரயாணம் செய்து சிகிச்சை செய்யும்படி ஏற்பாடு செய்யலாம். நகரங்களில் இருந்தால் அவர்களுக்கு

[Sri K. S. Lakshmipathi Naicker] [18th March 1953

வருமானம் வருகிறது என்பதால் டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்வதில்லை, அவர்கள் நகரங்களிலேயே இருந்துகொண்டு வருமானத்தை பெற்றுக்கொண்டு இந்த வான்கள் மூலமாக கிராமங்களுக்குச் சென்று சிகிச்சை செய்யலாம். காலை 6-மணிக்குப் புறப்பட்டு மாலை 6-மணிக்கு திரும்பி நகரங்களுக்கு வந்துவிடலாம். உண்மையிலேயே இப்பொழுது கிராமங்களில் பிரசவத்திற்கு வசதியே இல்லை. ஜனங்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்காரால் அவர்களுக்கு எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை. ஆகவே நான் சொல்வதென்னவென்றால் ஒரு மோபைல் ஆஸ்பத்திரியை இந்த வருஷத்திலேயே ஆரம்பிப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். விளம்பரம் சம்பந்தமாக குறிப்பிடுகிறேன். விவசாயம் முன்னுக்கு வருவதற்கு demonstration மூலமாக செலவு செய்து சினிமாப் படங்கள் மூலமாக ஒவ்வொரு கிராமங்களிலும் விவசாயத்தைப் பற்றியும் கால்நடைகள் அபிவிருத்தி பற்றியும் விளம்பரம் செய்யலாம். அதற்காக ஒவ்வொரு கிராமங்களிலும் படங்களைக் காட்டவேண்டும். இப்பொழுது நகரங்களில் தான் கண காட்சிகள் நடை பெறுகின்றன. அவைகளை கிராமங்களில் நடத்த வேண்டும். இங்கு நடந்த ஒரு கண்காட்சியைப் பார்த்தேன். விவசாய டிபார்ட்டுமெண்டு கண்காட்சியில் சேர்ந்திருந்தார்கள். அதை நான் சுற்றிப் பார்த்து வரும்போது ஒரு இடத்தில் சில கோழிகள் இருந்தன. அவைகளுக்கு பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒரு நாட்டுக்கோழிக்கு ஒரு புதுப்பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றி கேட்டதற்கு தவறு தலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இவ்வித கண்காட்சிகளைப் பார்க்கும்போது வருத்தப்பட முடியாமலிருக்க முடியவில்லை. ஆகவே இம்மாதிரியான கண காட்சிகளை நகரங்களில் நடத்தாமல் கிராமங்களில் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.''

* Sri A. RAMACHANDRA REDDIAR :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் பட்ஜெட்டை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். வட ஆற்காடு ஜில்லாவில் பாசன வசதி அதிகமாக இல்லாததை கவனித்து ஆவன செய்யவேண்டுமென்றும், சாத்தூர் அணைக்கட்டு வேலையை சர்க்கார் உடனடியாக ஆரம்பித்து முடித்து, இதிலிருந்து திருவண்ணாமலை முனிசிபாலிடிக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சென்ற சில வருஷங்களாக மழையின்மையால் கஷ்டப்படும் குடியானவர்களுக்கு வரிவஜா செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். 100 ரூபாய்க்கு மேல் தீர்வை கட்டுகிறவர்களுக்கு வரிவஜா இல்லை என்று போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டரை திருத்தி இருப்பது அரசியல் அமைப்பில் அடிப்படையான உறிமையை பரிப்பதாகும். இந்த திருத்த ஆர்டரை ரத்து செய்து பழயபடியே வரிவஜா செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"5 ஏக்கருக்கு மேல் நஞ்சையும், 15 ஏக்கருக்கு மேல் புஞ்சையும் இருப்பவர்களுக்கு ஆயில் எஞ்சின்கள் கொடுப்பதில்லை என்று சர்க்கார் முடிவு செய்து இருக்கிறது. இவர்களுக்கு வசதி அளிப்பதற்கு வட ஆற்காடு ஜில்லாவில் இருப்பதைப்போல் எஞ்சின்கள் கொடுத்துதவ கூட்டுறவு சங்கங்களை எல்லா ஜில்லாக்களிலும் வைத்துதவி செய்ய வேண்டும்.

"கூட்டுறவு பிரதம நில அடமான பாங்கிகளில் கடன் விண்ணப்பங்கள் ஏராளமாக பைசலாகாமல் குவிந்து கிடப்பதால் இன்னும் 7 கூட்டுறவு சப்-ரிஜிஸ்தரார்களை கொடுத்துதவவேண்டும்.

"திருவண்ணாமலை தாலூக்காவில் 4 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன. இவைகளில் கொத்தந்த வாடியிலும், வேட்டவலத்திலும் ஐந்து மாதங்களாக டாக்டர்கள் இல்லை. உடனடியாக டாக்டர்களை நியமிக்க வேண்டும். நாத்தாம்பூண்டியில் டாக்டர் சரிவர கவனிப்பதில்லை என்று சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

18th March 1953] [Sri A. Ramachandra Reddiar]

"கிராமங்களில் புறம்போக்கிலுள்ள மரங்களை வெட்டாமல் பாதுகாக்கும் பொறுப்பை கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வைக்கக்கூடாது என்னுடைய சொந்த மரங்களை இராக்காலங்களில் ஏழை ஜனங்கள் வெட்டி விறகாக்கி விற்று ஜீவனம் செய்தார்கள். கூடுமானவரையில் புறம்போக்கிலுள்ள மரங்களை, அவைகளின் பக்கங்களிலுள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு மரம் பட்டா செய்வதுதான் நல்ல முறை.

"காடுகளை பஞ்சாயத்துக்கள் சரியாய் நிர்வாகம் செய்யவில்லை என்று சர்க்கார் எடுத்துக்கொண்ட பிறகு பஞ்சாயத்துக்களே மேல் என்னும் அளவுக்கு ஆகிவிட்டது. வெள்ளாடுகள் ஏராளமாக காடுகளில் மேய்கின்றார்கள். மாதம் 1-க்கு ஆடு 1-க்கு 4 அணா வீதம், வாச்சா, கார்டு ரேஞ்சர்களுக்கு மாமூலாக வசூலிக்கொண்டு வருகிறது.

"வெள்ளாடு வளர்ப்பவர்களின் புள்ளி விவரங்கள், ஒவ்வொரு வரும் எவ்வளவு ஆடுகள் வைத்திருக்கிறார்கள் என்றும், வளர்க்கும் ஆடுகளுக்கு ஜீவனத்திற்காக என்ன ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டு வளர்க்கிறார்கள் என்றும் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும்.

"மாகாணத்தை 5 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மற்றொரு பிரிவுக்கு உணவு தானியங்கள் போகக்கூடாதென இருக்கும் உத்திரவை ரத்து செய்து மாகாணம் பூராவும் போகவேண்டுமென சர்க்கார் தைரியமாக முடிவு செய்யவேண்டும்.

"மாலை 7-மணிக்கு மேல் உணவு தானியங்களை எடுத்துக்கொண்டு போகக்கூடாதென்றிருந்த, உத்தரவை மீறி எடுத்துச் செல்வதுசர்வ சாதாரணமாகிவிட்டது. இதைத் தடுக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"மின்சார வெட்டினால் வேலை செய்ய முடியாமல் இருப்பவர்களுக்கு ஆயில் எஞ்சின்கள் வைத்துக்கொள்ளலாமென்று சர்க்கார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இதை அனுசரித்து அனுமதி கோரியவர்களுக்கு எஞ்சினைத் தனிக் கட்டடத்தில் வைக்கவேண்டுமென்று Factory Inspector உத்திரவு செய்திருக்கிறார். அப்படி இல்லாவிட்டால் தற்காலிகமாக ஒரு வருஷத்திற்கு சில கண்டிஷன்களின் பேரில் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். தனிக்கட்டடத்தில் இஞ்சின்களை வைப்பதற்கு வேறு ஹல்லர், எக்ஸ்பெல்லர், டெகார்டிகேடர் வைக்கவேண்டும். ஆகவே ஒரே கட்டடத்திலேயே இஞ்சின்களையும் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

"வட ஆற்காடு ஜில்லாவில் மணிலா விதையே அற்றுப் போய்விட்டபடியால் சர்க்கார் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று மூன்று மாதங்களுக்கு முன்னமே தெரிவித்திருக்கிறேன். நான் தெரிவித்த பொழுது மணிலாப்பயிர் விலை பாரம் 1-க்கு ரூ. 120, ரூ. 130 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 200 ஆகிவிட்டது. குறைந்தது 50,000 மூட்டை காயாவது சர்க்கார் வாங்கித்தரவேண்டும். 12-40 p.m.

"கிராமாந்திரங்களிலிருந்து முனிசிபல் எல்லைக்குள் போகும் வண்டிகளுக்கு முனிசிபல் ரோடுகளை உபயோகப்படுத்துவதற்கு 6 மாதத்திற்கு ஒரு முறை வரி வசூலிக்கும்படி இருக்கும் 1947-ம் வருஷத்து சர்க்கார் உத்திரவை ரத்து செய்யவேண்டும்.

"கிராமாந்திரங்களிலிருந்து நகரங்களுக்கு போகும் வண்டி ஒன்றுக்கு நாளொன்றுக்கு இரண்டரை அணாக்கள் வீதம் சுங்கம் முனிசிபாலிடியில் வசூலிக்கிறார்கள். அனேகமாக எந்த நகரத்திலும் வண்டி மேடுகள் கிடையாது. வண்டிகள் தங்க வசதிகள் செய்து கொடுக்காமல் சுங்கம் வசூல் செய்யும் வழக்கத்தைத் தடுக்கவேண்டும்.

"பஸ் ரூட்டுகளை, ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரடி வழங்குவதில், C.R.T.B., கவர்ன்மெண்ட், ஹை கோர்ட்களில் எவ்விதமான முடிவுகள் அப்பீலில் செய்யப்பட்டன என்னும் புள்ளி விவரங்களை இந்த மந்திரி சபை பதவி ஏற்ற பிறகு வழங்கப்பட்டிருக்கும் ரூட்டுகளிலிருந்து, பரிசீலனை

చేయ్తు, బస్‌రూట్లుకలో వచ్చుకువతకు నిర్ణయమాన కొలంకయ్యి వకుక్క వేణ్డుం. బస్ ఆపరేటర్లకు బస్ రూట్లుకలో విరుపతై తడుక్క వేణ్డుం.

"S.S.L.C. పరీక్షకు 4 తడవైక్కు మేల్ పోకక్కూడాదెన్రుం సార్కార్ ఉత్తిరవినాల్ పాతిక్కప్పడువతాక పల పెత్రోర్కళ్ ఎన్ననిడం పుకార్ చెయ్తిరుప్పతాల్ ఇన్ద సార్కార్ అన్ద ఉత్తిరవై రత్తు చెయ్య వేణ్డుమాయ్ కేట్టుక్ కొళ్ళుకిరేన్.

